# திருக்குற்றாலக் குறவஞ்சியில் நீர்நிலைகள்

*மு. மகேஸ்வரி*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜூலை

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5043

**செல்வம் மல்கு செண்பகம் வேங்கை சென்றேறிக்**
**கொல்லை முல்லை மெல்லரும்பு ஈனும்**
**குற்றாலம்**

**(திருக்குறும்பலாப் பதிகம், பாடல் 3, வரி 1-2)**

என்று மலர் மணத்துடன் தமிழ் மணமும் தென்றல் தவழும் பெருமையினையும் உடையது திருக்குற்றாலம். குற்றாலத் தலமும், திருக்குற்றாலநாதரும் கொண்ட சிறப்புக்களை விளக்கவந்து தானும் பெயர் பெற்ற நூல் திருக்குற்றாலக் குறவஞ்சியாகும். இதனை முத்தமிழும் புத்ததொரு புதுமையும் கலந்து இயற்கை மணம் கமழ்கின்றது. அந்த வகையில் இந்தக் கட்டுரை திருக்குற்றாலக் குறவஞ்சியில் குறிப்பிடப்படும் நீர்நிலைகளைப் பதிவு செய்வதாக அமைகின்றது.

## நீர்நிலைகள்

திருக்குற்றாலக் குறவஞ்சியில் குறிப்பிடப்படும் நீர்நிலைகள் பற்றிய செய்திகளை மூன்றாக வகைப்படுத்தலாம்.

1. அருவி
2. ஆறு
3. குளங்கள்

## அருவி

திருக்குற்றாலக் குறவஞ்சியில் திருக்குற்றால மலையிலிருந்து விழும் மூன்று அருவிகளைப் பற்றிய செய்தி இடம்பெறுகின்றது. அவை,

1. தேனருவி
2. செண்பகா அருவி
3. வடஅருவி

## தேனருவி

திருக்குற்றாலத்தில் சிற்றருவிச் சாலையிலிருந்து மலைமேல் 5 கிலோமீட்டர் தொலைவில் பொதிகைமலை உச்சியில் அமைந்துள்ளது தேனருவி.

செண்பகாதேவி அருவிக்கு மேல் இருக்கும் தேனருவிக்குச் செல்லும் வழிகள் தோறும் அடர்ந்த காடுகளும், மரங்களும் செடிகளும் கொடிகளும் உள்ளன. தேனருவி மலையிலிருந்து விழும் இடம் தவிர, பிற இடங்கள், அதாவது நீர்த்தடாகம் உள்ள பகுதி இயற்கையான மலை விதானத்தைக் கொண்டுள்ளது. அம்மலைமேல் விதானங்களில் தேன் கூடுகள் காணப்படுவதால் இது தேனருவி எனப்பட்டது. தேனருவி பற்றிய செய்தி திருக்குற்றாலக் குறவஞ்சியில் 3 இடங்களில் காணப்படுகின்றது.

1. கதைத் தலைவியான வசந்தவல்லி குறத்தியைக் கண்டு மலைவளம் கேட்கும்போது, குறத்தி மலைவளம் கூறத் தொடங்குகின்றாள். அப்போது

**தேனருவித் திரையெழும்பி வானின் வழி ஒழுகும்**

***(பாடல், 54, வரி -5)***

என்று குறிப்பிடுகின்றாள். அதாவது தேனருவி சுமார் 100 அடி உயரத்திலிருந்து அருவியாக விழுகின்றது. இதனை "திரிகூடமலையில் உருவாகிய சித்ராநதி, முதலில் 100 அடி உயரத்திலிருந்து அருவியாக வீழ்கின்றது. இவ்வருவிக்குத் தேனருவி என்று பெயர். தேன் போன்ற மெல்லிய ஒழுக்குடையதாக இவ்வருவி காணப்படுவதால் தேனருவி எனப் பெயர் பெற்றது என்று கருதவும் இடமுண்டு" (சுப்பிரமணியக் கவிராயர். சொ. திருக்குற்றால நாத சுவாமி கோயில் வரலாறும், பண்பாடும், ப. 30) என்கிறார் சுப்பிரமணியக் கவிராயர். அதாவது தேனருவி மிக உயரமான இடத்திலிருந்து விழுவதைப் பார்த்த கவிஞருக்கு அது வானிலிருந்து விழுவதாகப்படுகின்றது எனலாம்.

2. குறத்தி வசந்தவல்லிக்குத் தலமகிமை கூறும் மற்றொரு இடத்தில் நாட்டுவளம் பற்றிப் பேசுகின்றாள். அப்போது

**"மேன்மை பெறுந் திரிகூடத் தேனருவித் துறைக்கே"**

***(திருக்குற்றாலக் குறவஞ்சி, பா. 58, வரி. 3)***

என்று குறிப்பிடுகின்றாள். அது மட்டுமல்லாமல், "மெய்யுணர்வு உடையார்கூடச் சித்திரநதி தோன்றிய வரலாற்றை அறியமாட்டார்கள். ஆனாலும் சிறிது சொல்வேன் அம்மே நீ கேட்பாயாக. உயர்வு பெற்ற திரிகூடத்திலுள்ள தேனருவித் துறையிடத்தே ஒரு சிவலிங்கம் தேவர்களுக்கு மட்டும் அறிந்த மறைபொருளாய்த் தோன்றி நின்றது. அத்தகைய தேனருவித் துறையை அயன் உரைத்த இடம் இன்னதென்று அறியாமல், அரிய தவஞ்செய்தற்காகத் தேடி அலைகின்ற காலத்தில் மௌனநிலை எய்திய தேவர்கட்கு எங்கள் குலத்தோன்றல்களான வேடர்கள் இஃதென்று சிவமது கங்கை ஆறாக வழங்கப் பெறுவது" என்றும் கூறுகின்றாள். குறத்தியின் கூற்றிலிருந்து தேனருவிக்கும் "சிவமது கங்கை" என்ற மற்றொரு பெயரும் இருந்துள்ளதை அறிய முடிகின்றது.

3. இறுதியாக உள்ள வாழ்த்துப்பாடலில்

**"சித்ரநதி இடத்தானை தேனருவித் தடத்தானை**

***(திருக்குற்றாலக் குறவஞ்சி 7 - வது கண்ணி)***

என்று ஆசிரியர் வாழ்த்துவதாக அமைந்துள்ள இப்பகுதியிலும் தேனருவி பற்றிய செய்தி இடம்பெறுகின்றது.

**செண்பகாதேவி**

தேனருவியின் கீழ் அமைந்துள்ளது செண்பக அருவி. "செண்பக மரங்கள் சூழ்ந்த வனம் ஆதலால் இது செண்பகக்காடு என அழைக்கப்பட்டது. செண்பக வனத்தில் இவ்வருவி வீழ்வதால் செண்பக அருவி என

அழைக்கப்பட்டது" என்கிறார் முனைவர் ரு. கஸ்தூரி அவர்கள் (கஸ்தூரி. உரு. திருக்குற்றாலத் தல வரலாறு ப. 32) இதன் உயரம் 30 அடி.

செண்பக அருவி பற்றிய செய்தி திருக்குற்றாலக் குறவஞ்சியில் ஒரு இடத்தில் மட்டும் காணப்படுகின்றது. அதாவது குறத்தி நாட்டுவளம் கூறும் அதே பகுதியில்,

**செண்பகா டவித்துறையின் பண்பு செ ால்லக்**
**கேளாய்"**

**(திருக்குற்றாலக் குறவங்சி பா. 58, ப ாடல் . 2, வரி. 2)**

என்று செண்பகாடவித் துறையினது சிறப்பைக் கூறுகின்றாள். "தவ முனிவர்களுடைய கூட்டமும், அவர் தங்கியிருக்கின்ற குகையும், சஞ்சீவி முதலான மந்திர சக்தியைத் தரும் பச்சிலையும், வான்வழிச் செல்லும் சித்தர்களும், மௌனயோகிகளும் இறைவன் திருமுன்பு காத்துக்கிடக்கின்ற திருக்கயிலாய மலையை ஒத்ததாக விளங்கும்" என்கிறாள். திருக்குற்றால மலையை "தென்கயிலாயம்" என்று மக்கள் போற்றும் சிறப்பினை இங்கு நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

## வடஅருவி

செண்பக அருவியாக விழுந்து ஆறாக ஓடிவரும் நீர் 288 அடி உயரத்திலிருந்து குற்றாலத்தில் விழும்போது வடஅருவி என்று அழைக்கப்படுகின்றது. வடஅருவி குறித்த செய்தி 5 இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இது தவிர பொங்குமாங்கடல் பற்றிய செய்தியும் ஒரே ஒரு இடத்தில் இடம்பெறுகின்றது. வடஅருவியில் விழும் நீர் இடையில் ஒரு பாறையில் தடுக்கப்படும். அப்பாறையில் நீர் விழுந்து விழுந்து மிக ஆழமான பள்ளம் ஏற்பட்டுள்ளது. இவ்விடத்தில் அருவி பாய்ந்து பொங்கி எழுவது, கடல் பொங்கி எழுவது போன்று தோன்றும். இதற்குப்

**"பொங்குமாங்கடல்" என்று பெயர்.**
**நங்கைமார் குரவையொலி பொங்குமாங்கடல்**

**(திருக்குற்றாலக் குறவஞ்சி பா. 58, கண்ணி -2 வரி -2)**

என்கிறாள் குறத்தி. ஆகாய கங்கை புமியில் நேரடியாக விழுந்தால் உலக உயிர்கள் தாங்காது என்று எண்ணிய ஈசன் கங்கையைத் தன் தலைமேல் தாங்கியது போல், இவ்வருவி நீரையும் பொங்குமாங்கடல் தாங்கிக் கொண்டது எனலாம்.

**தெண்ணீர் வடவருவித் தீர்த்தத்தார்**

**(திருக்குற்றாலக் குறவஞ்சி பா. 46 கண்ணி -1 வரி -1)**

**கங்கையென்னும் வடஅருவி தங்குமிந்த்ர சாபம்**

**(திருக்குற்றாலக் குறவஞ்சி பா. 58 கண்ணி -3 வரி-3)**

**பம்பும் வடபால் அருவியில் தோய்ந்தவர்"**

**(திருக்குற்றாலக் குறவஞ்சி பா. 105 சரணம் -5 வரி-3)**

**வற்றாத வடஅருவிச் சாரல் நீங்கி**

**(திருக்குற்றாலக் குறவஞ்சி பா. 113 வரி -5 )**

என்றெல்லாம் வடஅருவி குறிப்பிடப்படுகின்றது.

## நதி அல்லது ஆறு

திருக்குற்றாலக் குறவஞ்சியில் இடம்பெறும் ஆறும், அருவிகளும் தலைவனுக்கு அடையாக அமைகின்றன. திருக்குற்றால நாதரைக் குறிப்பிடும்பொழுது "வடஅருவித் திருக்குற்றாலர்" "சித்ராநதி இடத்தான்" "தேனருவித் தடத்தான்" சிற்றாற்றங்கரையான் வடவருவித் துறையான் என்றெல்லாம் குறிப்பிடுகின்றார் திரிகூடராசப்பக்கவிராயர். ஆறு குறித்துப் பேசும் கவிராயர் சித்ராநதி, சிற்றாறு என இரண்டு ஆறுகளைக் குறிப்பிடுகின்றார்.

**குற்றால நாயகர் சிற்றாற்று வெள்ளம் போல்"**

**(திருக்குற்றாலக் குறவஞ்சி, பாடல் 91, வரி. 5)**

*சிற்றாற்றங் கரையானை திரிகூடவரையானை"*
***(திருக்குற்றாலக் குறவஞ்சி, வாழ்த்து, கண்ணி. 7)***

என்ற பாடல் வரிகளில் சிற்றாறு குறித்த செய்தி 3 இடங்களில் பேசப்படுகின்றது.

**"தேன்புரை ஏறுஞ் சித்திரா நதியான்"**
***(திருக்குற்றாலக் குறவஞ்சி, பா. 49, வரி -4)***

என்று குறிப்பிடும்பொழுது சித்ரா நதி நீரின் இன்சுவை பேசப்படுகின்றது. அதாவது "சித்ராநதியின் இன்சுவை தெவிட்டி மடக்குருகிற்குப் புரையேறும் காட்சி கவிதைச் சுவை பயக்கும்" என ச.வே.சு. குறிப்பிடுகின்றார் *(சுப்பிரமணியன் ச.வே. தமிழ் இலக்கியத்தில் ஆறு, ப. 187)*

**குளங்கள்**

அருவி, ஆறுகளைப் பற்றிய செய்திகளைத் தரும் கவிராயர் குளங்களாகிய நீர் நிலைகளைப் பற்றிய செய்திகளையும் குறிப்பிடத் தவறவில்லை. குறவனும், நூவனும் கண்ணி வைத்துப் பறவைகளைப் பிடிக்கும் போது, பறவைகள் கீழிறங்கும் தன்மையைப் படம் பிடித்துக் காட்டுகின்றார். அப்பொழுது கிட்டத்தட்ட 47 குளங்கள் பற்றிய செய்திகளைத் தருகின்றார். செங்குளம், பாரைக்குளம், பாட்டப் பெருங்குளம், செங்குறிஞ்சிக் குளம், பாட்டப் பெருங்குளம், இராஜகுலராமப்பேரி, வெள்வெகுதி, கண்டுகொண்டான் மாணிக்கம் ஆகியன அவற்றுள் சிலவாகும்.

**முடிவுகள்**

திருக்குற்றால மலையில் தேனருவி, செண்பக அருவி, சிற்றருவி, பேரருவி, ஐந்தருவி, பழத்தோட்ட அருவி, புலியருவி, புது அருவி, சாமியார் அருவி எனப் பல அருவிகள் இருப்பினும், திரிகூட ராசப்பக் கவிராயர் தேனருவி, செண்பக அருவி , வடவருவி (பேரருவி) ஆகிய மூன்றை மட்டுமே குறிப்பிடுகின்றார். திருக்குற்றாலநாதர் பாட்டுடைத் தலைவர் என்பதால், பிற அருவிகளைப் பற்றிப் பேசாமல் குற்றால அருவி பற்றிய செய்திகளை மட்டுமே பதிவு செய்கின்றார் எனலாம். ஒரு கவிஞனுடைய படைப்பில் அவனைச் சுற்றியுள்ள இயற்கைச் சூழல் சார்ந்த செய்திகள் இயல்பாகவே வெளிப்படும். அவ்வகையில் கவிராயர் குற்றாலத்தின் அருகே அமைந்த பல்வேறு நீர்நிலைகளைப் பட்டியலிட்டுக் காட்டுகின்றார். எனவே இவர் இடச்சார்பும், சுயச் சார்பும் பொருந்திய கவிஞர் என்பது புலப்படுகின்றது.

**பார்வை நூல்கள்**

1. சுப்பிரமணியக் கவிராயர். சொ. திருக்குற்றாலநாதசுவாமி கோயில் வரலாறும், பண்பாடும்
2. கஸ்தூரி. உரு. திருக்குற்றாலத் தல வரலாறு. சுப்பிரமணியன் . ச.வே. தமிழ் இலக்கியத்தில் ஆறு